# அரையாண்டுத்தேர்வு

# 2023/2024

# தமிழ்

## ஆண்டு 11

| | |
|---|---|
| **நேரம்:** 180 மணித்துளிகள் | **மொத்தப்புள்ளிகள்:** 100<br>(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்:** சனிக்கிழமை | **பக்கங்கள்:** 19 |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

## பகுதி 1 - எழுதுதல்

### 1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1 2 3 4

1. செம்மொழிக்குரிய பதினொரு தகுதிகளையும் கொண்ட ஒரே மொழி
   1. சிங்களம்
   2. ஆங்கிலம்
   3. மலையாளம்
   4. தமிழ்

2. ப் என்ற மெய்யெழுத்தின் இனவெழுத்து
   1. ம்
   2. ஞ்
   3. த்
   4. ந்

3. இசையரசி நடனமாடியபோது காற்சலங்கை கலீர்கலீர் என ஒலித்தது. கலீர்கலீர் என்பது
   1. அடுக்குத்தொடர்
   2. இரட்டைக்கிளவி
   3. இணைமொழி
   4. அடுக்கிடுக்குத்தொடர்

4. 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தினுள் நுழைந்தவர்கள்
   1. ஆரியர்
   2. ஆங்கிலேயர்
   3. முகமதியர்
   4. ஒல்லாந்தர்

5. நாம் எமது விடுதலைக்காக இன்றும் அறவழியில் போராடுகின்றோம். போராடுகின்றோம் என்பது
   1. தன்மைப்பன்மை நிகழ்கால வினைமுற்று
   2. முன்னிலைப்பன்மை எதிர்கால வினைமுற்று
   3. தன்மை ஒருமை நிகழ்கால வினைமுற்று
   4. படர்க்கைப்பன்மை எதிர்கால வினைமுற்று

6. மலை போன்ற தோள் என்ற உவமையணியின் பொதுத்தன்மை
   1. வீரம்
   2. வலிமை
   3. உயர்வு
   4. மென்மை

7. ‘எமக்கான விடுதலையை நாமே வென்றெடுப்போம்’ என்று தனது கவிதைகள் மூலம் வெளிப்படுத்தியவர்
   1. விபுலாநந்தர்
   2. புதுவை இரத்தினதுரை
   3. பாவாணர்
   4. மகாகவி து. உருத்திரமூர்த்தி

1 2 3 4

8. பசுமை + கிளி என்பதைப் புணர்த்தினால்
   1. பச்சைக்கிளி
   2. பைம்கிளி
   3. பசியகிளி
   4. பைங்கிளி

9. மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வரும் வினாவெழுத்து
   1. ஓ
   2. யா
   3. ஏ
   4. ஆ

10. தூசுதட்டுதல் என்பதன் சொற்பொருள்
   1. தூய்மையாக்குதல்
   2. பெருமைப்படுத்துதல்
   3. உறுதியாக்குதல்
   4. மதிப்பளித்தல்

11. வன்தொடர்க் குற்றியலுகரத்துக்கு எடுத்துக்காட்டு
   1. பேச்சு
   2. பஞ்சு
   3. கோடு
   4. படகு

12. "வீறுடைய செம்மொழி தமிழ்மொழி" என தமிழ்மொழியைச் சிறப்பித்துக் கூறியவர்
   1. தேவநேயப்பாவாணர்
   2. பாவலரேறு பெருஞ்சித்திரனார்
   3. பாரதிதாசன்
   4. மீனாட்சி சுந்தரம்பிள்ளை

13. இலக்கியங்களைப் படிப்பதற்கு தூண்டும் ஊக்கியாக இருப்பது
   1. அரங்கேற்றம்
   2. விளையாட்டுப் போட்டி
   3. களியாட்டு விழா
   4. இலக்கியத் திறனாய்வு

14. ஈழத்தமிழர் கார்த்திகை மாதத்தில் மாவீரரைச் சிறப்பாக வழிபடுவார்கள். இச்சொல்லியத்தில் தோன்றாத உறுப்பு
   1. பயனிலை
   2. செயப்படுபொருள்
   3. எழுவாய்
   4. எழுவாய் அடைமொழி

1 2 3 4

15. நரி ஊளையிடும். அதுபோல குதிரை
    1. கனைக்கும்
    2. கத்தும்
    3. பிளிறும்
    4. முழங்கும்

16. உரைநடை வளர்ச்சி பெற்ற காலம்
    1. பல்லவர்காலம்
    2. சங்கமருவியகாலம்
    3. சோழர்காலம்
    4. நாயக்கர்காலம்

17. மெய் + மயக்கம் என்பதைப் புணர்த்தி எழுதினால்
    1. மெய்மயக்கம்
    2. மெய்ம்மயக்கம்
    3. மெய்ஞ்மயக்கம்
    4. மெய்ந்மயக்கம்

18. விழிக்கயல் என்பது
    1. உயர்வுநவிற்சி அணி
    2. தற்குறிப்பேற்ற அணி
    3. உருவக அணி
    4. உவமையணி

19. இன்றைய மொழியியலாளர்களின் கோட்பாடுகளுக்கு விளக்கமாக அமைந்துள்ள நூல்
    1. தொன்னூல் விளக்கம்
    2. சிலப்பதிகாரம்
    3. தொல்காப்பியம்
    4. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்

20. வினையாலணையும் பெயர்
    1. எழுதியவள்
    2. எழுதினாள்
    3. எழுதுதல்
    4. எழுதி

21. மெய்யெழுத்துகளுக்குரிய மாத்திரை
    1. ஒன்று
    2. இரண்டு
    3. மூன்று
    4. அரை

**1 2 3 4**

22. நாயக்கர்காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்
    1. காளமேகப்புலவர்
    2. புகழேந்தி
    3. கபிலர்
    4. ஔவையார்

23. வல்லின மெய்யெழுத்துகள்
    1. ங், ஞ், ந், ண், ம், ன்
    2. க், ச், ட், த், ப், ற்
    3. ய், ர், ல், வ், ழ், ள்
    4. ல், ற், ண், ன், ஞ், வ்

24. செய்யுளின் அடிகளிலோ, சீர்களிலோ முதலாம் எழுத்து ஒன்றி வருவது
    1. மோனை
    2. எதுகை
    3. சிலேடை
    4. உயர்வுநவிற்சி

25. உலா, தூது, பரணி என்பன
    1. உரைப்பாக்கள்
    2. பெருங்காப்பியங்கள்
    3. சிற்றிலக்கியங்கள்
    4. கீழ்க்கணக்கு நூல்கள்

26. இணைமொழி
    1. சீரும் சிறப்பும்
    2. வெட்டவெளி
    3. நேர் நேராக
    4. துருதுரு

27. நீந்தினார்கள் என்ற வினைமுற்றின் வினையடி
    1. நீந்தி
    2. நீந்து
    3. நீந்திய
    4. நீந்தும்

28. செம்மொழிக்குரிய தகுதிப்பாடு அல்லாதது
    1. தொன்மை
    2. தாய்மைப்பண்பு
    3. இலக்கியவளம்
    4. பிறமொழிக்கலப்பு

1 2 3 4

29. இவர்கள் என்பது
    1. அகவினா
    2. அகச்சுட்டு
    3. புறச்சுட்டு
    4. புறவினா

30. நாயக்கர்கள் ஆட்சி செய்யத் தொடங்கிய இடம்
    1. புகார்
    2. வஞ்சி
    3. மதுரை
    4. குமரி

(30 x 1 = 30 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தமிழ்மொழியில் இலக்கியவளம் நிறைந்து காணப்படுகிறது என்பதை எவ்வாறு விளங்கிக்கொள்ள முடிகிறது?

______________________________

______________________________

2. ஓர் இனத்தின் இலக்கிய வரலாற்றை வரையறுப்பவை எவை?

______________________________

______________________________

3. கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதைத் தொகுப்புகளுள் இரண்டு எழுதுக.

______________________________

______________________________

4. இலக்கியத் திறனாய்வுக்கலை எவற்றிற்குப் பெரிதும் துணை செய்கின்றது?

______________________________

______________________________

5. தரப்பட்டுள்ள செய்வினைச் சொல்லியத்தை செயப்பாட்டுவினைச் சொல்லியமாக மாற்றி எழுதுக.

பள்ளி முதல்வர் மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

______________________________

______________________________

6. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

உவமைத்தொடர்: ______________________________

______________________________

காரணப்பெயர்: ______________________________

______________________________

7. கலப்புச் சொல்லியம் ஒன்று எழுதுக.

______________________________

______________________________


(5 X 2 = 10 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ளனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.**

**எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. கல்லறைத் தெய்வங்களே! மாவீரரே!

2.



**அல்லது**

**பாடலுக்கான பொருளுரையை எழுதுக.**

3. கல்விபெறும் மாணவனாம் பருவம் கண்டீர்
கவலையற்ற களிசிறந்த கால மாகும்;
தொல்லைமிக்க உலகநடைச் சுழலில் நேரும்
துன்பங்கள் துயரங்கள் தோன்றாக் காலம்;
எல்லையற்ற ஆர்வமுற்ற இக்கா லந்தான்
எக்கலையும் பயில்வதற்கும் ஏற்ற காலம்.

(10 புள்ளிகள்)

__________________________________________

__________________________________________

__________________________________________

__________________________________________

__________________________________________

__________________________________________

__________________________________________

__________________________________________

__________________________________________

__________________________________________

**4. தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

நீரானது மலையில் மழையாகப் பொழிகின்றது. மழைநீர் சிறிய ஓடைகளாகி, ஒன்றாக இணைந்து அருவியாகி, மலையின் வழியே கீழே வருகிறது. பாய்ந்தும் அசைந்தும் ஓடும் ஆறாகி நிலம் வழியே நீண்டு சென்று இறுதியில் கடலில் கலக்கிறது. இந்த ஆற்றின் ஓட்டத்தை ஒட்டியே தமிழர் நான்கு நில வாழ்வை வகுத்துக் கொண்டனர். மலைகளின் ஓடை, சுனை அருவிகளுடன் இணைந்த வாழ்வைக் குறிஞ்சிநில வாழ்வு என்றனர். மலையின் வழியே பாய்ந்தோடும் ஆற்றுக்கு இருகரைகளிலும் மக்கள் வாழ்ந்த நிலத்தை முல்லை என்றனர். இந்நிலத்திலுள்ள காடுகள் மந்தைகளுக்கு உணவு கொடுத்தன. சாய்வற்ற நிலத்தில் ஆறு மெதுவாகவே நகர்ந்தது. அந்த நிலங்களில் வாழ்ந்த மக்கள் ஆற்றின் நீரைத் தேக்கி உழவுத் தொழில் செய்தனர். இவர்களது வாழ்வு மருதநில வாழ்வு எனப்பட்டது. ஆறு, ஓட்டத்தின் நிறைவில் கடலைத் தொட்டது. கடலோடு ஒட்டி வாழ்ந்த மக்கள் வாழ்வு நெய்தல் எனப்பட்டது. இவ்வாறு நீரின் ஓட்டத்தை ஒட்டி வாழ்ந்த பழந்தமிழர் வாழ்வானது பண்பு நிறைந்ததாக இருந்தது. மாந்த நாகரிகமானது நீரின் கரையில் தோன்றியது என இன்றைய மாந்த ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

(10 புள்ளிகள்)

**5. தரப்பட்டுள்ள பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**தமிழ்:**

நாள்தோறும் அதிகாலையில் எழவேண்டும் என்பதை அன்று தொட்டு முன்னோர்கள் எடுத்துரைத்து வருகின்றனர். அதிகாலையில் எழுவது என்பது வெறும் ஒழுக்கம் சார்ந்த செயற்பாடு மட்டுமல்ல: அது உடல்நலம் சார்ந்ததும் ஆகும். உலகில் உள்ள பல்வேறு வெற்றியாளர்களும் அதிகாலையில் எழும்பும் பழக்கத்தைக் கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். இவ்வாறு அதிகாலையில் எழுவது, எம் வாழ்க்கையின் இலக்குகளை விரைவில் அடைவதற்கான ஒரு திறவுகோலாகும். அதிகாலை நேரமானது, இயற்கை எமக்களித்த வளமான ஒரு சூழல். இச்சூழல் உடலுக்கும் மனத்திற்கும் அமைதியை ஏற்படுத்தும். வெளியே உந்துகளின் போக்குவரத்து அதிகம் இல்லாததால், அதிகாலையில் தூயகாற்றை உள்ளிழுப்பது நுரையீரலுக்கு நன்மை அளிக்கிறது. அதிகாலையில் எழும்போது அதிக வெய்யில் அற்ற அந்த அமைதியான காலநிலை, உடலைக் குளிர்விப்பதுடன் உடற்பயிற்சிகள் செய்வதற்குரிய வேளையாகவும் அமைகிறது. இதனால், அன்றைய நாள் சுறுசுறுப்பான நாளாக இருக்கும். நமது புலன்கள் அந்தச் சுறுசுறுப்பை உணர்ந்து செயற்படும். மேலும், அந்த நாளை நீண்ட நாளாக மாற்றும். அத்துடன் பல்வேறு செயற்பாடுகளை எம்மால் எளிதாகச் செய்து முடிக்கவும் இயலும்.

(10 புள்ளிகள்)

**வாழிடமொழி:**

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

**6. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. இலக்கியத் திறனாய்வு - ஒரு தோழனின் காதற் கடிதம்
2. தமிழிலக்கிய வரலாற்றில் நாயக்கர்காலம்
3. அழகியற் கலைகள்
4. நாட்டின் வளர்ச்சியில் ஊடகங்களின் பணி

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- இன்றைய ஊடகங்கள்
- வளர்ச்சிக்கு உதவும் வழிகள்
- தாயக விடுதலையில் தேசிய ஊடகங்கள் ஆற்றும் பணி

(15 புள்ளிகள்)

## பகுதி 2

## வாசித்தலும் விளங்கிக் கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

தொல்பழங்காலம் முதல் மாந்தர் தமது உள்ளத்தில் எழுந்த அழகு உணர்ச்சியை வடிவமைப்பில் காட்ட முயன்றனர். கற்கால மாந்தர் தாம் கண்ட விலங்குகளையும் தம்முடன் வாழ்ந்த மக்களையும் ஓவியங்களாக, குகைகளிலும் சுவர்களிலும் கூரைகளிலும் வரைந்தனர். அவர்கள் செம்மண்ணையும் கரியையும் குழைத்து, ஓவியங்களை வரைந்து தங்களது ஆர்வத்தைத் தம்மை அறியாமலேயே வெளிக்காட்டினர். இதன் விளைவாக மாந்தரின் அழகுணர்ச்சி, உள்ளத்து நெகிழ்ச்சி போன்றவற்றின் ஊற்றாக ஓவியம் தோன்றியது. இத்தோற்றமானது, தமிழரின் பண்பாட்டை வெளிப்படுத்துவதற்குரிய அடிப்படைகளுள் ஒன்றாகவும் விளங்கியது. எவ்வாறெனில், போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரர்களது நினைவு அடையாளமாகக் கல்லில் அவர்களது உருவத்தைச் செதுக்கினர். பின்னர், அவர்களது பெயரையும் புகழையும் பொறித்து நடுகல் நாட்டி வழிபாடு செய்தனர். இவ்வழக்கம் தமிழர்களிடையே காலங்காலமாக இருந்து வந்துள்ளது. அவ்வாறு கற்களிலே வீரர்களின் உருவங்களைச் செதுக்குவதற்கு முன்னர், தாங்கள் செதுக்க விரும்பும் உருவத்தை முதலில் ஓவியமாக வரைந்து பார்ப்பர். பின்பு அதைக் கல்லில் வரைந்து, அதைச் சுற்றிலும் செதுக்கி உருவத்தை அமைப்பர். இதிலிருந்து பழந்தமிழரிடையே ஓவியக்கலை சார்ந்த உணர்வு இருந்திருக்கிறது என்பது தெரிகிறது. மேலும், மகளிரும் ஆடவரும் தங்கள் தோள்களிலும் மார்புகளிலும் சந்தனக் குழம்பினால் மான், மயில், மலர் போன்ற ஓவியங்களை வரைந்தனர் என்பதையும் தொல்காப்பியத்தின் மூலம் அறிய முடிகிறது.

1. கற்கால மாந்தர் ஓவியங்களை எங்கே வரைந்தார்கள்?
   ஓவியங்களை வரைவதற்கு எவற்றைப் பயன்படுத்தினார்கள்? (2 புள்ளிகள்)

   ________________________________________

   ________________________________________

2. போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரர்களுக்கு எவ்வாறு நடுகல் வழிபாடு செய்தார்கள்? (2 புள்ளிகள்)

   ________________________________________

   ________________________________________

3. எவற்றின் ஊற்றாக ஓவியம் தோன்றியது? (2 புள்ளிகள்)

   ________________________________________

   ________________________________________

4. கற்கால மாந்தர் எவற்றை ஓவியங்களாக வரைந்தார்கள்?

(2 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

5. இங்கு கூறப்பட்டுள்ள நூல் எது? (1 புள்ளி)

______________________________________________

______________________________________________

(9 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள உரைப்பகுதிகளை வாசித்து, அவற்றுக்கு மிகப்பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து எழுதுக.**

**(ஒரு தலைப்பை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்)**

**தலைப்புகள்:**

- விடுதலைக் கலைநிகழ்வு
- நல்வாய்ப்புச் சீட்டு
- மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு
- தாயகச் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கான கலைமாலை

1. ______________________________

'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பது ஔவையின் முதுமொழி. கல்வி என்பது தமிழரின் மிகப்பெரிய சொத்து. எத்தகைய இடர்கள் ஏற்பட்டாலும் தமது கல்வியைத் தொடர்ந்து கற்பார்கள். போரின்பின் தாயகச் சிறார்களின் கல்வி வளர்ச்சி குன்றியுள்ளது. எனவே, அவர்களின் கல்விமேம்பாட்டிற்காகக் கலைமாலை ஒன்றை நடத்துகிறோம். கலைமாலைக்கு வருகை தந்து எம் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிடுவீர்!

2. ______________________________

தாயக விடுதலைக்கு வித்தான மாவீரரை எம்மால் என்றும் மறக்கமுடியாது. அவர்களின் பெற்றோர் மதிப்புக்குரியவர்கள். மாவீரர் நாளில் அவர்களுக்கு மதிப்பளிக்கப்படுவது நீங்கள் அறிந்ததே. ஆனால், இம்முறை சிறீலங்கா அரசின் நெருக்கடிகளால் உரிய காலத்தில் மதிப்பளிப்புச் செய்ய முடியவில்லை. தடைகளை உடைத்து எதிர்வரும் 16.01.24 அன்று கிளிநொச்சி நகர மண்டபத்தில் மதிப்பளிப்புச் செய்யவுள்ளோம். மதிப்பளிப்பு நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுங்கள்!

3. ______________________________

லெப். கேணல் நவம் அவர்களின் நினைவாகத் தேசியத்தலைவரால் உருவாக்கப்பட்டது நவம் அறிவுக்கூடம். இங்கு விழுப்புண் அடைந்த போராளிகள் பலர் தொழில் சார்ந்தும் அறிவியல் சார்ந்தும் கல்வி கற்று வளர்ந்து வருகின்றார்கள். அவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது எமது கடமை. எனவே, அவர்களுக்கு உதவுவதற்காக எமது கழகத்தால் நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு ஒன்று நடத்தப்படவுள்ளது. நல்வாய்ப்புச் சீட்டினைப் பெற்று உதவிடுவீர்!

(3 x 2 = 6 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக் கொள்ளுதலும் | | | | |
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |